


**01. 08. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. குடியரசு துணைத்தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2. எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மாநிலங்களவை நாள் முழுமைக்கும், மக்களவை பிற்பகல் 2 மணிவரையிலும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

3. தமிழ்நாட்டில் மேம்பாட்டு பணிகள் முடிவடைந்த ஐந்து சுற்றுலா தலங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

4. தாமிரபரணி - வைப்பாறு இணைப்புத்திட்டத்தை செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

5. சீன மக்காவ் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

**************

**தேர்தல்**

குடியரசு துணைத்தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான அட்டவணையை புதுதில்லியில் இன்று வெளியிட்ட தேர்தல் ஆணையம் வேட்பு மனுதாக்கல் வரும் 7ஆம் தேதி தொடங்கும் என்று கூறியுள்ளது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 21ஆம் தேதி கடைசி நாளாகும்.

22ஆம் தேதி மனுக்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை திரும்ப பெற 25ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தேவை ஏற்பட்டால் அடுத்த மாதம் 9ஆம் தேதி தேர்தல் நடைபெறும்.

**************

**நாடாளுமன்றம்**

பீஹார் மாநில வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மாநிலங்களவை நாள் முழுமைக்கும், மக்களவை பிற்பகல் 2 மணிவரையிலும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்று கூடியதும் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக எதிர்கட்சிகள் வழங்கியிருந்த 30 ஒத்திவைப்பு நோட்டிஸ்கள் நிராகரிக்கப்படுவதாக அவைத்துணைத்தலைவர் திரு.ஹரிவன்ச் தெரிவித்தார்.

பீஹார் வாக்காளர் பட்டியல் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று எதிர்கட்சிகள் விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்த அவர், தேர்தல் ஆணையம் அரசியல் சாசனத்திற்கு உட்பட்டது என்று சுட்டிக்காட்டினார்.

அவை அலுவல்கள் சுமூகமாக நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்ற அவரது கோரிக்கையை ஏற்க மறுத்த எதிர்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையில் கேள்வி நேரத்தை அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா நடத்த முற்பட்டபோது பீஹார் பிரச்சனை உள்ளிட்ட பிரச்சனைகளை எழுப்பி எதிர்கட்சியினர் முழக்கமிட்டனர்.

ஜனநாயகத்தை வலுப்படுத்த கேள்வி நேரம் மிக முக்கியமானது என்று கூறிய திரு.ஓம்.பிர்லா அதில் அனைவரும் பங்கேற்க விடுத்த கோரிக்கைக்கு யாரும் செவி மடுக்காமல் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

**********

**பிரதமர் சுதந்திரதினம்**

நாட்டின் 79ஆவது சுதந்திர தினம் வரும் 15ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில் பிரதமர் திரு.நரேந்திரமோடி செங்கோட்டையில் தேசிய கொடியை ஏற்றிவைத்து உரையாற்றுகிறார்.

பிரதமர் உரையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் நமோசெயலி, mygov.in இணையதளம் வாயிலாக தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

**********

**பிரதமர் - வேளாண் நிதி**

பிரதமர் திரு.நரேந்திரமோடி வாரணாசியில் 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளுக்கு நாளை அடிக்கல் நாட்டி முடிவடைந்த திட்ட பணிகளையும் தொடங்கிவைக்கிறார்.

இந்நிகழ்வுகளின் ஒருபகுதியாக விவசாயிகளுக்கான வேளாண் நிதி உதவி திட்டத்தின் 20 ஆவது தவணையையும் அவர் விடுவிக்கிறார்.

இந்த திட்டத்தின் கீழ் 9 கோடியே 70 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளின் வங்கி கணக்குகளில் 20 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலுத்தப்படும்.

இந்த திட்டத்தின் கீழ் 3 தவணைகளாக தலா 2 ஆயிரம் ரூபாய் வீதம் ஆண்டொன்றுக்கு ஆறாயிரம் ரூபாய் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**********

**ராஜ்நாத்சிங்**

நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்த முப்படைகள் தலைமையக சிவிலியன் சேவை பிரிவு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சிவிலியன் பிரிவினரின் சேவை தினத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர் தேசத்தின் பாதுகாப்பு அமைப்புகளின் செயலாக்கத்தில் சிவிலியன் பிரிவு வலிமையுடன் பங்காற்றுவதாகவும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

**********

**பால கங்காதர திலக்**

**“சுதந்திரம் எனது பிறப்புரிமை**

**அதனை அடைந்தே தீருவேன்”** என்று வீர முழக்கமிட்ட லோக்மான்ய பால கங்காதர திலக்கின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

சுய ராஜ்ய இயக்கத்தை பிரம்மாண்டமாக முன்னெடுத்துச்சென்று அதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி நமது கலாச்சாரத்தை தேசத்தின் அடையாளமாக விளங்கச்செய்தவர் பாலகங்காதர் என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தமது சமூகவலைதள பதிவில் புகழாரம் சூட்டியுள்ளார்.

தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய பாலகங்காதர் நாட்டு மக்களுக்கு என்றென்றும் உத்வேகமாக திகழ்வதாக பாராட்டு தெரிவித்துள்ளார்.

**********

## UPI

UPI பண பரிவர்த்தனையில் புதிய விதிமுறைகளை தேசிய பண பரிவர்த்தனை கழகம் இன்றுமுதல் நடைமுறைபடுத்துகிறது.

இதன்படி ஒவ்வொரு பணபரிவர்த்தனைக்கு பின்னரும் அனுப்புவோரின் பெயர் விவரத்தை பணம் பெறுவோர் இனி அறிந்துகொள்ள முடியும்.

வாடிக்கையாளர்கள் தங்களது கைபேசி இணைப்புடன் தொடர்புடைய வங்கிகளின் பெயர்களை தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பணபரிவர்த்தனை தொடர்பான தகவல்களை வாடிக்கையாளர்கள் 90 வினாடிகள் அவகாசத்தில் 3 முறை மட்டுமே இனி பரிசோதிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**********

## முதலமைச்சர்

தமிழ்நாடு சுற்றுலா துறை சார்பில் 18 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவடைந்த 5 திட்ட பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இன்று திறந்துவைத்தார்.

இதன்படி திருவள்ளூர் மாவட்டம் பூண்டி நீர்தேக்கம்,

புதுக்கோட்டை - முத்துக்குடா கடற்கரை,

திருப்பத்தூர் - ஏலகிரி

தென்காசி – குண்டாறு அணை சுற்றுலா தலங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா அமைக்கவும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டியுள்ளார்.

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையின் கீழ் சென்னையின் பல்வேறு பகுதிகளில் 26 புதிய திட்ட பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் வேர்களை தேடி திட்டத்தின் கீழ் 14 நாடுகளை சேர்ந்த 99 அயலக தமிழ் இளைஞர்களுக்கு பயண குறிப்புகள் புத்தகங்கள் அடையாள அட்டைகளையும் அவர் வழங்கினார்.

**********

## நலன்காக்கும் ஸ்டாலின்

தமிழ்நாட்டில் பொதுமக்களின் நலன் காக்கும் சிறப்பு மருத்துவ திட்ட முகாம் நாளை தொடங்கப்பட உள்ள நிலையில் ஆயிரத்து 256 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கூடுதல் தலைமை செயலாளர் டாக்டர் ஜே.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை முடிவுகள் அன்றையதினமே குறுஞ்செய்தி வாயிலாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

**வாய்ஸ்**

**********

**எடப்பாடி**

தமிழ்நாட்டில் தாமிரபரணி - வைப்பாறு இணைப்புத்திட்டத்தை செயல்படுத்த அஇஅதிமுக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் வேளாண் மேம்பாட்டிற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கவும்,

மாணாவாரி பயிர்கள் உற்பத்தி அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

**********

**அன்பில் மகேஷ்**

நாகை மாவட்டத்தில் நான்காவது புத்தக கண்காட்சியை மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்றுமாலை தொடங்கிவைக்கிறார்.

நூற்றுக்கும் மேற்பட்ட அரங்குகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் இக்கண்காட்சியில் இடம்பெறுகின்றன.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**மீனவர்கள்**

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை சிறையில் கடந்த 6 மாதங்களாக அடைக்கப்பட்டிருந்த ராமநாதபுரம் மண்டபம் பகுதியை சேர்ந்த இரண்டு மீனவர்கள் விடுவிக்கப்பட்டு சென்னை விமான நிலையம் இன்று வந்தடைந்தனர்.

மத்திய மாநில அரசுகளின் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து சென்ற மாதம் 25ஆம் தேதி இவ்விருவரும் விடுதலை செய்யப்பட்டு இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இன்று அதிகாலை கொழும்புவிலிருந்து விமானம் மூலம் இவர்கள் சென்னை வந்தடைந்தனர்.

**********

**கொல்லிமலை**

**ஆடிப்பெருக்கு விழாவை முன்னிட்டு பாதுகாப்பு** கருதி நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல நாளைமுதல் இரண்டு நாட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**மேட்டூர்**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 18 ஆயிரம் கன அடியாக குறைந்ததை அடுத்து 5 நாட்களுக்கு பின்னர் பரிசல் இயக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 20 ஆயிரத்து 500 கன அடியாக குறைந்துள்ளது.

அணையிலிருந்து 30 ஆயிரத்து 500 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

**********

**வெள்ள அபாயம்**

தஞ்சை மாவட்டத்தில் கொள்ளிடம் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து 27 கரையோர கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

**********

**கோவில்**

மதுரை அழகர் கோவில் அருள்மிகு சுந்தர்ராஜபெருமாள் திருக்கோவில் ஆடிபெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 9ஆம் தேதி நடைபெறுகிறது.

**********

**பேட்மிண்டன்**

சீன மக்காவ் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு லக்ஷயா சென்னும், Tharun Mannepalli-யும் முன்னேறியுள்ளனர்.

காலிறுதியில் லக்ஷயா சென் - சீனாவின் Xuan Chen Zhu-ஐ 21-14 18-21 21-14 என்ற செட்களிலும்,

Mannepalli - சினாவின் **Zhe An Hu**-ஐ 21-12 13-21 21-18 என்ற செட்களிலும் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை – மலேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********

**கிரிக்கெட்**

லண்டன் ஓவலில் இங்கிலாந்திற்கு எதிரான 5-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 204 ரன் எடுத்திருந்தது. கருண் நாயர் 52 ரன்னுடனும், வாஷிங்டன் சுந்தர் 19 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**